# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## பிணை (திருத்தம்)

***1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2020, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2020, நவெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***15 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் 6 ஆம், 12 ஆம் மற்றும் 18 ஆம் பிரிவுகளைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவுகளின் சட்டப் பயனானது அப்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் விதிக்கப்பட்ட குற்றப்பணங்களை அதிகரிப்பதற்குமாகும்.*

# பிணை (திருத்தம்)

ச.வ. - ஓ. 49/2019

## 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, பிணை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்.

**2.** இதற்கான அட்டவணையின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் பிரிவுகள், நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய பிரிவுகளில் குறித்துரைக் கப்பட்ட தவறுகள் தொடர்பில் விதிக்கப்பட்ட குற்றப்பணத்தினை அதிகரிக்கும் நோக்கத்துக்காக அவ்வட்டவணையின் நிரை III இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

### அட்டவணை

(பிரிவு 2)

| நிரை I | நிரை II | நிரை III |
|---|---|---|
| திருத்தப்பட்ட பிரிவுகள் | நீக்கம் | உட்புகுத்துகை |
| 6(2) | ஆயிரம் ரூபாவை | பதினையாயிரம் ரூபாவை |
| 12(2) | ஆயிரம் ரூபாவை | பத்தாயிரம் ரூபாவை |
| 18(5) | ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை | இருபத்தையாயிரம் ரூபாவை |